# மாகாணக் கல்வித் திணைக்களம்
# வடக்கு மாகாணம்
# முன்னோடிப் பரீட்சை- 2021

**தரம் 13 (2021)** **கணக்கீடு 33-T-1** **இரண்டு மணித்தியாலம்**

- 01 தொடக்கம் 30 வரையுள்ள வினாக்களுக்குச் சரியான விடையைத் தெரிந்தெடுத்து அதன் இலக்கத்தை வினாவின் எதிரேயுள்ள புள்ளிக்கோட்டின் மீது எழுதுக.
- 31 தொடக்கம் 50 வரையுள்ள வினாக்களுக்குரிய சுருக்கமான விடையைப் புள்ளிக்கோட்டின் மீது எழுதுக.
- ஒவ்வொரு வினாவுக்கும் இரண்டு புள்ளிகள் உரித்தாகும்.

| வினாத்தாள் 1 | |
|---|---|
| வினா இல | புள்ளிகள் |
| 01-30 | ……… |
| 30-50 | ……… |
| மொத்தம் | ……… |

## பகுதி 1

1. கணக்கீடு தொடர்பில் பின்வரும் கூற்றுக்களில் மிகச் சரியான கூற்றைத் தெரிவு செய்க.
   A. கணக்கீட்டின் பிரதான பிரிவுகள் நிதிக் கணக்கீடு முகாமைக் கணக்கீடாகும்.
   B. நிதிக் கணக்கீட்டின் பிரதான நோக்கம் அக்கறையுடையோருக்கு தீர்மானமெடுத்தலுக்கு பயனுள்ள தகவல்களை வழுங்கல்
   C. கணக்கீட்டு அலகு என்பது கணக்கீட்டை கண்காணிக்கும் அரசு ஆகும்.
   D. கொவிட் 19 சமூகப்பரம்பல் கணக்கீட்டடின் சமூக கலாச்சார சூழல் ஆகும்
   1) A யும் B யும் 2) A யும் B யும் C யும் 3) A யும் B யும் D யும்
   4) A யும் B யும் C யும் D யும் 5) A யும் C யும்

(……….)

2. நிறுவனமொன்றின் அக்கறையுடைய தரப்பினரும் அதற்கான காரணங்களும் வருமாறு.

| அக்கறையுடையதரப்பினர் | காரணங்கள் |
|---|---|
| 1) உரிமையாளர் | A - தொழில் பாதுகாப்பு |
| 2) முகாமையாளர் | B – சட்டஒழுங்கை நிலைநாட்டல் |
| 3) ஊழியர் | C – பொருத்தமான தீர்மானமெடுத்தல் |
| 4) அரசு | D – பொருளின் தரம் |
| 5) வாடிக்கையாளர் | E - மூலதனத்தை பாதுகாத்தல் |

சரியான வரிசைப்படுத்தல் எவை
1) BDCAE 2) CBEDA 3) ECDAB 4) ECBAD 5) ECABD

(……….)

❖ கொரானா நிறுவனத்தின் 1.1.2021 இல் சொத்து, பொறுப்பு முறையே ரூ 320000, ரூ 120000 ஜனவரியில் இடம் பெற்ற தகவல்கள் வருமாறு.

- 2021 ஜனவரியில் ரூ 25000 கிரயமானபொருட்கள் ரூ 40000 இற்கு விற்கப்பட்டது. இதற்கு 2020 டிசம்பரில் 10000 பெறப்பட்டதுடன் மிகுதி இம்மாதம் பெறப்பட்டது.
- 2020 டிசம்பர் மாதம் செலுத்தப்பட்ட முற்பணத்தொகை ரூ 25000 இற்கு பதிலாக 2021 ஜனவரியில் ரூ 15000 பொருட்கள் மாத்திரம் இம்மாதம் பெறப்பட்டது.

- 2021 ஜனவரி மாத வாடகை ரூ 4000 இல் 2020 டிசம்பர் ரூ 3000 முற்பணமாக செலுத்தப்பட்டது. மிகுதி 2021 பெப்ரவரியில் செலுத்தப்பட்டது.
- உரிமையாளரின் ஆயுட்காப்புறுதிக்கு ஜனவரியில் நிறுவனத்தால் செலுத்திய தொகை ரூ 1000

**3ம் 4ம் வினாக்களுக்கு விடை தருக**

3. 31.1.2021 இல் இறுதிக் கணக்கீட்டுச் சமன்பாடு யாது ?

| | சொத்து | = உரிமை | + பொறுப்பு |
|---|---|---|---|
| 1) | 321000 | 210000 | 111000 |
| 2) | 321000 | 201000 | 120000 |
| 3) | 351000 | 210000 | 241000 |
| 4) | 350000 | 200000 | 150000 |
| 5) | 341000 | 210000 | 131000 |

(……….)

4. 31.1.2021 முடிவடைந்த மாதத்திற்கான தேறியலாபம்
   *1)* ரூ. 13000  2) ரூ. 5000  3) ரூ. 10000  4) ரூ. 9000  5) ரூ. 11000

(……….)

5. ராகுல் நிறுவனத்தில் இடம்பெற்ற கொடுக்கல் வாங்கல்களுக்கமைய மூல ஆவணங்கள் பின்வரும் ஒழுங்கில் பட்டியல்படுத்தப்பட்டுள்ளன.

   A) நாட்குறிப்பு கைச்சாத்து  B) கொடுப்பனவு கைச்சாத்து

   C) வரவுத்தாள்  D) பட்டியல்

   ABCDE ஒழுங்காக குறித்து நிற்பது எதனை?

   1) தளபாடக் கொள்வனவு , பெற்ற வாடகை , உட்திரும்பல். கடன்கொள்வனவு
   2) காசோலை மறுத்தல், கொடுத்த வாடகை, உட்திரும்பல், பொறிக்கொள்வனவு
   3) கடன் விற்பனை, சம்பளக் கொடுப்பனவு ,வெளித்திரும்பல், சென்மதி மின்சாரம்
   4) பொருள்பற்று , கடன்கொடுநருக்கு செலுத்தல், வெளித்திரும்பல், கடன்விற்பனை
   5) நிலையான சொத்து கடன்விற்பனை, மின்சாரக்கொடுப்பனவு , உட்திரும்பல், கடன் கொள்வனவு

(……….)

- கமல் நிறுவனத்தின் 31.3.2021 முடிவடைந்த நிதியாண்டுக்கான கடன்பட்டோன் கட்டுப்பாட்டு கணக்கு ரூ 42000 பட்டியல் மீதி உடன்படவில்லை. காரணங்கள் வருமாறு.

A. கடன் விற்பனை ரூ 6500 கடன்பட்டோன் கட்டுப்பாட்டுக்கணக்கில் 5600 என பதியப்பட்டதுடன், கடன்பட்டோன் பேரேட்டில் 6000 எனவும் விற்பனைக் கணக்கில் 5000 எனவும் பதிவிடப்பட்டது.
B. விற்பனைத் திரும்பல் நாளேடு 2000 ஆல் கூட்டிக்கூட்டப்பட்டது.
C. அறவிடமுடியாக்கடன் ரூ 2000 கடன்பட்டேன் பேரேட்டில் சரியாக பதியப்பட்ட போதிலும் பொதுப்பேரேட்டில் உள்ள கணக்குகளில் ரூ 200 என பதியப்பட்டது.
D. மறுக்கப்பட்ட காசோலை ரூ 3000 கடன்பட்டோன் கணக்கில் ரூ 300 என செலவிடப்பட்டது.

**மேற்படி தகவல்களைப் பயன்னடுத்தி 6 ம் 7 ம் 8 ம் வினாக்களுக்கு விடை தருக?**

**6.** மேற்படி பிழை தவறுகளை திருத்துவதால் இலாபத்தில் ஏற்பட்ட அதிகரிப்பு அல்லது குறைவு யாது?
   1) ரூ 1700 ஆல் அதிகரிக்கும்
   2) ரூ 1700 ஆல் குறையும்
   3) ரூ 1300 ஆல் அதிகரிக்கும்
   4) ரூ 1300 ஆல் குறையும்
   5) ரூ 2100 ஆல் அதிகரிக்கும்

(……….)

7. திருத்திய கடன்பட்டோன் கட்டுப்பாட்டு கணக்கு மீதி யாது?

1) ரூபா 44900 2) ரூபா 43100 3) ரூபா 42600 4) ரூபா 42800 5) ரூபா 41400

(……….)

8. திருத்த முன் கடன்பட்டோன் பேரேட்டுப் பட்டியல் மீதி யாது?

1) ரூபா 45900 2) ரூபா 40600 3) ரூபா 39300 4) ரூபா 40400 5) ரூபா 42100

(……….)

❖ வரையறுத்த சிகரம் கம்பனியில் 2021 மாாச் 31 இல் முடிவடைந்த நிதியாண்டுக்கான பிழைதவறுகள் வருமாறு.

31.3.2021 இல் பிழைகள் சீராக்கமுன் நிறுவனத்தின் தேறியசொத்து ரூ 500000 இவ்வாண்டுக்கான மொத்தலாபம், தேறியலாபம் முறையே ரூ 162000, ரூ 48000 ஆகும்.

A – விற்பனைத்திரும்பல் 50000 விற்பனை நாளேட்டில் பதிவிடப்பட்டது

B – பெற்றவாடகை ரூ 2000 கொடுத்தவாடகை கணக்கில் வரவிடப்பட்டது.

C – 2021 மார்ச் 1 இல் பொறிக்கடன் கொள்வனவு ரூ 120000 கொள்வனவு நாளேட்டில் பதியப்பட்டது. பொறிக்கு 10 % தேய்விடப்படுகின்றது.

D - ஆரம்ப இருப்பு ரூ 10000 கூட்டி மதிப்பிடப்பட்டது.

**9 ம் 10 ம் வினாக்களுக்கு விடை தருக.**

9. மேற்படி பிழைதவறுகளால் தொங்கல் கணக்கு மீதி யாது?

1) வரவு ரூ 4000 2) செலவு ரூ 4000 3) வரவு ரூ 13000

4) செலவு ரூ 13000 5) வரவு ரூ 87000

(……….)

10. மேற்படி பிழைதவறுகளை திருத்தியபின் சரியான தேறியசொத்து யாது?

1) ரூ 499000 2) ரூ 511000 3) ரூ 501000 4) 513000 5) ரூ 523000

(……….)

11. கணக்கீட்டு எண்ணக்கரு தொடர்பில் பின்வரும் கூற்றுக்களில் மிகச் சரியான கூற்றைத் தெரிவு செய்க.

A - இணைதல் எண்ணக்கருவின்படி பெறுமானத்தேய்வு வருமானக்கூற்றில் செலவாகக் காட்டப்படும்.

B – நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கும் போது பணவீக்கம் சீராக்கத் தேவையில்லை என்பது பணஅளவீட்டு எண்ணக்கருவாகும்.

C – கொள்வனவு செய்யப்பட்ட பொருளின் ஒரு பகுதியை செலவாகவும் மிகுதியை இருப்பாகவும் காட்டுவது இணைத்தல் எண்ணகருவின்படியாகும்.

1) A,B யும் 2) B,C யும் 3) A, C யும் 4) A,B, C யும் 5) B மட்டும்

(……….)

12. குத்தகையின் கீழ் கொள்வனவு செய்யப்பட்ட சொத்து அதன் இறுதிக்கொடுப்பனவு செய்யமுன்னா் சொத்தாக காட்டப்பட்டது. இது எவ் எண்ணக்கருவின் அடிப்படையிலாகும்.

1) பாதுகாப்பு எண்ணக்கரு
2) பணஅளவீட்டு எண்ணக்கரு
3) அலகுசாா் எண்ணக்கரு
4) தோற்றத்தைக்காட்டிலும் கருத்து முக்கியத்துவம்
5) தொடந்து செல் எண்ணக்கரு

(……….)

13. சங்கரப்பிள்ளை அன்சன்ஸ் நிறுவனத்தின் ஏடுகளில் வருட இறுதியிலும் ஆரம்பத்திலும் காணப்படும் மீதிகள் வருமாறு.

| | 31.3.2021 | 31.3.2020 |
|---|---|---|
| கடன்பட்டோர் கட்டுப்பாட்டுக் கணக்கு | 84000 | 72000 |
| அறவிடமுடியா ஐயக்கடன் ஒதுக்கீடு | ? | 3600 |

31.3.2021 இல் முடிவடைந்த காலத்தில் ரூ 4000 தொகை அறவிடமுடியாக்கடனாக பதிவளிக்கப்பட்டது. சென்றாண்டு பதிவளிக்கப்பட்ட ரூ 2000 அறவிடமுடியாக்கடன் இவ்வாண்டு மீளப்பெறப்பட்டது. அறவிடமுடியாக்கடன் ஐயக்கடன் ஒதுக்கீட்டு கணக்கினுடாகவே பதியப்படுகின்றது. ஒவ்வொரு காலப்பகுதியிலும் ஒரே வீதம் அறவிடமுடியா ஐயக்கடனுக்கு ஒதுக்கீடு செய்யப்படுகின்றது. 31.3.2021 இல் முடிவடைந்த காலப்பகுதியில் வருமானக்கூற்றில் காட்டப்படவேண்டிய அறவிடமுடியா ஐயக்கடன்தொகை யாது?

1) ரூ 4600 2) ரூ 2600 3) ரூ 4000 4) ரூ 2000 5) ரூ 6600

(……….)

14. பாவலன் நிறுவனத்தின் நிதியாண்டு ஒவ்வொரு 31. 3 இலும் முடிவடைகின்றது. 31.3.2021 இல் ஏற்பட்ட தீ விபத்தில் பெரும்பகுதி பண்டங்கள் அழிக்கப்பட்டன. இதிலிருந்து ரூ 12000 பண்டங்கள் மாத்திரம் மீட்கப்பட்டன. 31.3.2021 இல் முடிவடைந்த நிதியாண்டுக்கான விற்பனை , கொள்வனவுகள் முறையே முறையே ரூ 240 000, ரூ 180 000 1.4.2020 இல் இருப்பு ரூ 64000 ஆண்டில் உரிமையாளர் ரூ 4000 பண்டங்களை பற்றினார். நிறுவனம் தனது பண்டங்களை கிரயத்தில் 20% இலாபம் சேர்த்து விற்பனை செய்தது. தீயினால் அழிக்கப்பட்ட பொருளின் கிரயத்தில் 75% காப்புறுதி கம்பனி நட்டஈடாக தர ஒப்புக்கொண்டது. தீயினால் அழிக்கப்பட்ட பொருளின் கிரயம், தீயழிவு நட்டம் முறையே என்ன?
1) ரூ 12000, ரூ 3000
2) ரூ 40000, ரூ 10000
3) ரூ 28000, ரூ 12000
4) ரூ 4000, ரூ 7000
5) ரூ 28000, ரூ 7000

(……….)

15. மாற்றல் கிரயம் தொடர்பில் பின்வரும் கூற்றுக்களில் சரியான கூற்றைத் தெரிவு செய்க.
A. மாற்றல் கிரயம் மூலக்கிரயத்துடன் உற்பத்தி மேந்தலையை கூட்டிப் பெறப்படுவது
B. மொத்த உற்பத்திக்கிரயத்திலிருந்து பயன்படுத்திய மூலப்பொருள் கிரயத்தை கழித்துப் பெறப்படுவது
C. நேர்கூலி, நேர் ஏனைய செலவு, உற்பத்தி மேந்தலையைக் கூட்டிப் பெறப்படுவது
D. விற்பனைக்கிரயத்திலிருந்து முடிவுப்பொருள் இருப்பில் ஏற்பட்ட குறைவையும், பயன்படுத்திய மூலப்பொருள் கிரயத்தையும் கழித்துப்பெறப்படுவதாகும்.

1) ABC 2) ACD 3) BCD 4) BC 5) AC

(……….)

❖ 31.3.2021 இல் முடிவடைந்த நிதியாண்டுக்கான சேரன் உற்பத்திக் கம்பனியின் முடிவடைந்த நிதியாண்டுக்கான தகவல்கள் வருமாறு.

| | |
|---|---|
| மூலப்பொருள் கொள்வனவு | ரூ 300 000 |
| மாற்றல் கிரயம் | ரூ 52 000 |
| மொத்த மேந்தலை | ரூ 48 000 |
| உற்பத்தியல்லா மேந்தலை | ரூ 18 000 |
| மூலப்பொருள் இருப்பு அதிகரிப்பு | ரூ 10 000 |
| விற்பனை | ரூ 450 000 |

மொத்தலாபவீதம் 20%

**16, 17 ம் வினாக்களுக்கு விடை தருக**

*16.* 31.32021 இல் முடிவடைந் நிதியாண்டுக்கான நிறுவனத்தின் முதற்கிரயம் யாது?

1. ரூ 358000 2) ரூ 312000 3) ரூ 360000 4) 342000 5) ரூ 362000

(……….)

*17.* 31.32021 இல் முடிவடைந் நிதியாண்டில் முடிவுப்பொருள் இருப்பில் ஏற்பட்ட அதிகரிப்பு அல்லது குறைவு யாது?

1) ரூ 46000 2) (ரூ 18000) 3) ரூ 42000 4) 32000 5) ரூ 18000

(……….)

❖ குயின் விளையாட்டுக் கழகத்தில் வருடாந்தம் அங்கத்தவர் ஒருவர் ரூபா 120 சந்தாக்கட்டனமாக செலுத்தும் 150 அங்கத்தவர் காணப்படுகின்றனர் .

1/4/2020 இல் மீதிகள்

சந்தா நிலுவை ரூபா 1200

முற்பன சந்தா ரூபா 600

நிதியாண்டில் 140 அங்கத்தவர் நடப்பாண்டு சந்தாவை செலுத்தினர். இதனை விட இவர்களில் 8 அங்கத்தவர் சென்ற வருடச் சந்தாவையும், இவர்களில் 15 அங்கத்தவர் அடுத்த வருட சந்தாவையும், செலுத்தியிருந்தனர்.

**18 ம் 19 ம்** வினாக்களுக்கு விடை தருக

*18.* 31.3.2021 ஆம் ஆண்டின் இறுதியில் வருமதி சந்தா யாது?

1) ரூ 1200 2) ரூ 600 3) ரூ 840 4) ரூ 1040 5) ரூ 1840

(……….)

*19.* 31.3.2021 இல் முடிவடைந்த நிதியாண்டுக்காக பெற்ற சந்தா யாது?

1) ரூபா 16000 2) ரூபா 19560 3) ரூபா 19800 4) ரூபா 19310 5) ரூபா 18840

(……….)

❖ சோதி நிறுவனத்தின் 31.3.2021 முடிவடைந்ந நிதியாண்டுக்கு பெறப்பட்ட தகவல்கள் வருமாறு

| | | |
|---|---|---|
| விற்பனை | ரூ | 300000 |
| விநியோகச் செலவு | ரூ | 28000 |
| நிர்வாகச் செலவு | ரூ | 24000 |
| பெற்றவாடகை | ரூ | 4000 |
| தேறிய இலாபம் | ரூ | 42000 |

மேற்படி மீதிகள் எடுக்கப்பட்ட பின்னர் பின்வரும் பிழைதவறுகள் கண்டுபிக்கப்பட்டது.

அ) சென்மதி மின்சாரம் ரூ 4000 வும் முற்பண விளம்பரம் ரூ 1000 வும் கருத்திற்கொள்ளப்படவில்லை.

ஆ) 1.10.2020 இல் இடம்பெற்ற தளபாடக்கொள்வனவு ரூ 40000 கொள்வனவுக் கணக்கிற்கு வரவிப்பட்டது தளபாடத்திற்கு 10% தேய்விடப்பட்டது.

**20 ம், 21 ம் வினாக்களுக்கு விடை தருக.**

20. 31.3.2021 இல் முடிவடைந்த நிதியாண்டுக்கான சரியான நிர்வாகச் செலவும், விநியோகச் செலவும் யாது?

| | நிர்வாகச் செலவு | விநியோகச் செலவு |
|---|---|---|
| 1) | 24000 | 27000 |
| 2) | 26000 | 27000 |
| 3) | 28000 | 22000 |
| 4) | 32000 | 27000 |
| 5) | 30000 | 27000 |

(……….)

21. 31.3.2021 இல் முடிவடைந்த நிதியாண்டுக்கான சரியான மொத்தலாபம், தேறியலாபம் யாது?

| | மொத்தலாபம் | தேறியலாபம் |
|---|---|---|
| 1) | 134000 | 77000 |
| 2) | 90000 | 75000 |
| 3) | 120000 | 75000 |
| 4) | 130000 | 75000 |
| 5) | 130000 | 77000 |

(……….)

❖ *பங்குடைமையொன்றில் மதியும் ரதியும் இலாபநட்டங்களை 3:2 என பகிரும் பங்காளர்கள் 1.4.2020 இல் இவர்களது மூலதன கணக்கு மீதிகள் முறையே ரூ 180 000, ரூ 120 000 ஆகும். இதே தினத்தில் நடைமுறை கணக்கு மீதிகள் முறையே ரூ 30 000, ரூ 20 000 1.4.2020 இல் தேவி புதிய பங்காளர்களராக சேர்க்கப்பட்டார். இவர் தனது மூலதனத்திற்கு தனது நன்மதிப்பு பங்கிற்காகவும் ரூ 100 000 ஈடுபடுத்தினார். நன்மதிப்பு தொடர்பான சீராக்கங்களை பங்காளர் மூலதன கணக்கினுடாக மேற்கொள்ளப்பட்டது. புதிய இலாபநட்ட வீதம் முறையே 5:3:2 ஆகும். மூதனத்திற்கு 10% வட்டி தேவிக்கு ஆண்டுச் சம்பளமாக ரூ 20 000 வழங்கப்பட வேண்டும்.*

*31.3.2021 இல் மூலதன நடைமுறை கணக்கு மீதிகள் வருமாறு*

| | *மூலதனம் ரூ* | *நடைமுறை கணக்கு ரூ* |
|---|---|---|
| *மதி* | *190 000* | *99 000* |
| *ரதி* | *130 000* | *63 000* |
| *தேவி* | *80 000* | *48 000* |

*22 ம் 23 ம் வினாக்களுக்கு விடை தருக*

*22. பங்குடைமையின் மொத்த நன்மதிப்பு தொகை யாது?*

*1) ரூ 200 000 2) ரூ 100 000 3) ரூ 300 000 4) ரூ 20 000 5) ரூ 120 000*

*(……….)*

*23. 31.3.2021 இல் முடிவடைந்த நிதியாண்டுக்கான பகிரக்கூடிய இலாபம் யாது?*

*1) ரூ 160 000 2) ரூ 100 000 3) ரூ 120 000 4) ரூ 150 000 5) ரூ 140 000*

*(……….)*

24. வரையறுத்த சங்கர் கம்பனி Vat பதிவு செய்யப்பட்ட கம்பனி 31.3.2021 இல் முடிவடைந்த நிதியாண்டுக்கான தகவல்கள் வருமாறு.

| | |
|---|---|
| பொறியின் பட்டியல் விலை | ரூ 500000 |
| பொறிக்கான தீர்வை | ரூ 30000 |
| பெறுமதிசேர்வரி | ரூ 20000 |
| வியாபாரக்கழிவு | ரூ 10000 |
| பொறி பழுதுபார்த்தல் செலவு | ரூ 5000 |
| பொறி நிறுவுதற்கட்டனம் | ரூ 20000 |
| பரீட்சார்த்த உற்பத்திக்கட்டனம் | ரூ 45000 |

பரீட்சார்த்த உற்பத்தி 100 அலகுகள் ஒவ்வொன்றும் ரூ 50 இற்கு விற்கப்பட்டது. இப்பொறியின் இழிவுப்பெறுமதி ரூ 20000 பயனுள்ள ஆயுட்காலம் 20 வருடம். 1.4..2020 இருந்து பொறி பயன்பாட்டிற்கு வருகின்றது.

LKAS 16 இற்கமைய பொறியின் கிரயமாக இனம்காணவேண்டிய தொகை யாது?

1) ரூ 595000 2) ரூ 590000 3) ரூ 590000 4) ரூ 480000 5) ரூ 580000

(……….)

25. வரையறுத்த சேதுபதி கம்பனியின் 31.3.2021 இல் முடிவடைந்த நிதியாண்டுக்கான வரிக்கு முன்லாபம் ரூ 146000. ஏனைய தகவல்கள் வருமாறு

| | |
|---|---|
| பெறுமானத்தேய்வு | ரூ 14000 |
| செலுத்தியவட்டி | ரூ 8000 |
| மோட்டார்விற்பனை லாபம் | ரூ 4000 |
| செலுத்தியவரி | ரூ 13000 |
| இருப்பு அதிகரிப்பு | ரூ 10000 |

வட்டியில் ரூ 3000 சென்மதியாகவுள்ளது.

செயற்பாட்டு நடவடிக்கையிலான தேறிய காசோட்டம் யாது?

1) ரூ 157000  2) ரூ 136000  3) ரூ 124000  4) ரூ 133000  5) 146000

(……….)

❖ வரையறுத்த ராஜ் கம்பனியின் 31.3.2021 இல் முடிவடைந்த நிதியாண்டுக்கான தகவல்கள் வருமாறு.

| **விபரம்** | **ரூ 000** |
|---|---|
| விற்பனை | 2400 |
| மொத்தலாபம் | 1300 |
| செயற்பாட்டுச்செலவு | 300 |
| மோட்டார் விற்பனை லாபம் | 50 |
| செலுத்திய பங்குலாபம் | 150 |
| காணி மீள்மதிப்பீட்டு மிகை | 100 |
| பொறிமதிப்பீட்டு பற்றாக்குறை | 40 |

31.3.2019 இல் பொறியானது ரூ 30000 கூட்டி மீள்மதிப்பிடப்பட்டிருந்தது. காணி 31.3.2021 இல் முதல்தடைவையாக கூட்டி மீள்மதிப்பிடப்பிடப்பட்டது.

**26 ம் 27 ம் 28 ம்** வினாக்களுக்கு விடை தருக.

26. இலங்கை கணக்கீட்டு நியமத்தினபடி 31.3.2021 இல் முடிவடைந்த வருடத்திற்கான மொத்தவருமானம், மொத்தச்செலவு எவை?

| | **மொத்தவருமானம் 000** | **மொத்தச்செலவு 000** |
|---|---|---|
| 1) | 2500 | 1400 |
| 2) | 2500 | 1440 |
| 3) | 2550 | 1440 |
| 4) | 2450 | 1250 |
| 5) | 2500 | 1400 |

(……….)

27. LKAS 1 இன்படி 31.3.2021 இல் முடிவடைந்த வருடத்திற்கு இனம்கானப்பட்ட இலாபம் மற்றும் ஏனைய முற்றுமடங்கிய வருமானம் யாது?

| | **இலாபம் 000** | **ஏனையமுற்றுமடங்கிய வருமானம் 000** |
|---|---|---|
| 1) | 1050 | 100 |
| 2) | 1150 | 150 |
| 3) | 1050 | 60 |
| 4) | 1040 | 70 |
| 5) | 1040 | 60 |

(……….)

*28.* LKAS 1 இன்படி 31.3.2021 இல் முடிவடைந்த வருடத்திற்கு நிறுத்திவைத்தலாபம் மற்றும் மொத்தமுற்றுமடங்கிய வருமானம் யாது?

| | நிறுத்திவைத்தலாபம் 000 | மொத்தமுற்றுடங்கியவருமானம் 000 |
|---|---|---|
| 1) | 890 | 1110 |
| 2) | 900 | 1000 |
| 3) | 810 | 1050 |
| 4) | 1010 | 1000 |
| 5) | 810 | 1110 |

(……….)

❖ ஆடைகளை உற்பத்தி செய்யும் கம்பனியொன்று விசேடவகையான மூலப்பொருட்களான துணி இவ் உற்பத்தியில் பயன்படுத்துகின்றது. ஒரு சட்டையை உற்பத்தி செய்வதற்கு 3 மீற்றர் துணி தேவைப்படுகின்றது. இதன் வாராந்த உற்பத்தியானது 70 இருந்து 140 சட்டைகள் ஆகும். இம் மூலப்பொருட்களின் மீள்கட்டளைத் ரூ 72000 துணியின் விநியோகக் காலம் **4 <u>தொடக்கம்</u> 8** நாட்கள் ஒரு மீற்றர் துணியின் விலை ரூ 120

**29 ம் 30 ம் வினாக்களுக்கு விடை தருக.**

*29.* துணிக்கான மறுகட்டளை மட்டமும் துணிக்கான நாளாந்த சராசரிப் பாவனையும் முறையே யாது?

1) 1120 மீற்றர், 80 மீற்றர் 2) 160 மீற்றர், 80 மீற்றர் 3) 180 மீற்றர், 60 மீற்றர்
4) 480 மீற்றர், 45 மீற்றர் 5) 120 மீற்றர் 45 மீற்றர்

(……….)

*30.* துனிக்கான ஆகக்கூடிய இருப்புமட்டமும், அகக்குறைந்த இருப்பு மட்டமும் முறையே யாது?

1) 600 மீற்றர், 180 மீற்றர் 2) 960 மீற்றர், 160 மீற்றர் 3) 480 மீற்றர், 210 மீற்றர்
4) 480 மீற்றர், 40 மீற்றர் 5) மீற்றர் 960 மீற்றர், 210 மீற்றர்

(……….)

❖ ***31- 50 வரையான வினாக்களுக்கு விடை தருக***

*31.* அ) கணக்கீட்டுச் சட்டகத்தின்படி பொறுப்பின் பண்புகள் 3 தருக?

............................................................................................................................................

............................................................................................................................................

............................................................................................................................................

ஆ) பின்வரும் ஒவ்வொரு தாக்கத்திற்கும் ஒரு உதாரணம் தருக.

i. பொறுப்பு அதிகரிக்க உரிமை குறைதல்

............................................................................................................

ii. உரிமை அதிகரிக்க உரிமை குறைதல்

............................................................................................................

32. பின்வரும் அடிப்படையில் நிதிக் கணக்கீட்டையும், முகாமைக் கணக்கீட்டையும் வேறுபடுத்துக.

| அடிப்படை | நிதிக் கணக்கீடு | முகாமைக் கணக்கீடு |
|---|---|---|
| 1. சட்டத்தேவை | ......................... | .............................. |
| 2. அறிக்கையிடும் காலம் | ............................ | .............................. |
| 3. அறிக்கை பயன்படுத்துவோர் | ......................... | ................................. |

33. 15% VAT உட்பட ரூ 92000 கொள்வனவு செய்யப்பட்டபொருட்கள் 15% VAT உட்பட ரூ 184000 இற்கு கடனுக்கு விற்கப்பட்டது. அதன்போது ரூ 2000 விளம்பரச்செலவு ஏற்பட்டது. மேற்படி சம்பவத்தால் தேறியசொத்தில் ஏற்பட்ட அதிகரிப்பு அல்லது குறைவு யாது?

............................................................................................................................................

❖ சுயந்தன் நிறுவனத்தின் 2021 மார்ச் எப்பிரல் மாதங்களுக்கான தகவல்கள் வருமாறு

| | மே | எப்பிரல் |
|---|---|---|
| எழுதிக்கொடுக்கப்பட்ட காசோலை | 154000 | 210000 |
| வைப்பச் செய்யப்பட்டகாசோலை | 205000 | 232000 |

இக்காலப்பகுதிகளுக்கான வங்கிக்கூற்றில் காணப்படும் தகவல்கள் வருமாறு

| | மே | ஏப்பிரல் |
|---|---|---|
| மாற்றப்பட்ட காசோலை | 138000 | 202000 |
| வசூழிக்கப்பட்ட காசோலை | 170000 | 227000 |
| நேரடிவைப்பு | 3000 | 6000 |
| வங்கிக்கட்டனம் | 4000 | 3000 |

2021 ஏப்பிரல் மாத காசுக்கட்டுப்பாடு மீதி ரூ 72000 சென்ற மாத மாற்றப்படாத வசூழிக்கப்படாத காசோலை நடப்பு மாதத்தில் மாற்றப்பட்டு வசூக்கப்பட்டது.

34ம், 35ம் ஆம் வினாக்களுக்கு விடை தருக

34. மே மாதத்தில் மாற்றப்படாத, வசூழிக்கப்படாத காசோலைகள் யாது?
 அ) மாற்றப்படாத காசோலை ரூ ..........................
 ஆ) வசூழிக்கப்படாத காசோலை ரூ ..........................

35. மே திருத்திய காசுக்கட்டுப்பாட்டு கணக்கு மீதியும், மே மாத வங்கிக்கூற்று மீதியும் யாது?
 அ) திருத்திய காசுக்கட்டுப்பாட்டுக் கணக்கு ரூ .........................................
 ஆ) வங்கிக்கூற்று மீதி ரூ .........................................

❖ 2021 மே 1 இல் ஆரம்பித்த ரமணன் நிறுவனத்தின் மாத விற்பனை விபரம் வருமாறு

| விற்பனை | விற்பனை | காசுக் கழிவு | வியாபாக் கழிவு | விற்பனைத் திகதி | பணம்செலுத்திய திகதி |
|---|---|---|---|---|---|
| காசு | 120000 | | 10% | 5.5 | 5.5 |
| கமல் | 250000 | 10% | 20% | 18.5 | 23.5 |
| விமல் | 320000 | 10% | 20% | 24.5 | 12.6 |

பத்து நாட்களுள் பணம் செலுத்தும் வாடிக்கையாளருக்கே காசுக் கழிவு அனுமதிக்கப்படும்.
மேலேயுள்ள தரவுகளை அடிப்படையாகக்கொண்டு **36 ம், 37 ம்** வினாக்களுக்கு விடை தருக.

36. மே மாதத்திற்கான கொடுத்த கழிவும், மே மாதத்தில் பெற்றகாசுத் தொகையும் முறையே யாது?
 அ) கொடுத்த கழிவு ரூ .............................
 ஆ) பெற்ற காசு ரூ ....................................

37. மே மாதத்திற்கான விற்பனை வருமானமும் மே மாதத்தில் கடன்பட்டோரிடம் பெற்ற காசும் முறையே யாது?
 அ) மே மாத விற்பனை ரூ ......................................
 ஆ) மே மாதத்தில் கடன்பட்டோரிடம் பெற்ற காசு ரூ ...................................

38. மொத்த உற்பத்திக் கிரயம் தொடர்பில் பின்வரும் கூற்றுக்கள் சரியா பிழையா எனக் குறிப்பிடுக.

A. மூலக்கிரயத்துடன் மேந்தலையை கூட்டிப்பெறப்படுவது (………..)

B. உற்பத்தியுடன் தொடர்புடைய நேர் செலவையும் நேரில் செலவையும் கூட்டிப் பெறப்படுவது (………)

C. மூலக்கிரயத்துடன் மொத்த மேந்தலையை கூட்டி உற்பத்தியல்லா மேந்தலையை கழித்துப் பெறப்படுவது. (………)

D. விற்பனைக் கிரயத்துடன் இறுதிமுடிவுப் பொருள் இருப்பைக்கூட்டி ஆரம்ப முடிவுப் பொருள் இருப்பை கழித்துப் பெறப்படுவது. (………..)

❖ 31.3.2021 இல் முடிவடைந்த நிதியாண்டுக்கான சாம் உற்பத்திக் கம்பனியின் முடிவடைந்த நிதியாண்டுக்கான தகவல்கள் வருமாறு.

| | |
|---|---|
| பயன்படுத்திய மூலப்பொருள் கிரயம் | ரூ 224 000 |
| முதற்கிரயம் | ரூ 160 000 |
| மொத்த உற்பத்திக்கிரயம் | ரூ 200 000 |
| விற்பனைக்கிரயம் | ரூ 260 000 |
| விற்பனை | ரூ 300 000 |

மேற்படி கணிப்பீட்டில் பின்வரும் பிழைகள் உள்ளடக்கப்பட்டுள்ளது.

அ) இறுதி மூலப்பொருள் ரூ 16000 ஆல் கூட்டி மதிப்பிட்டதுடன் ஆரம்ப குறைவேலை ரூ 8000 ஆல் கூட்டி மதிப்பிட்டது.

ஆ) தொழிற்சாலை வாடகை ரூ 12000 நிர்வாகச் செலவில் உள்ளடக்கப்பட்டது.

இ) உரிமையாளர் ரூ 6000 முடிவுப்பண்டங்களை பற்றினார் இவை பற்றிய பதிவுகள் இடம்பெறவில்லை.

ஈ) இயந்திர இயக்குனர் கூலி ரூ 8000 உற்பத்திக்கிரயக்கூற்றில் உள்ளடக்கப்படவில்லை.

**39, 40 ம் வினாக்களுக்கு விடை தருக**

39. சீராக்கப்பட்ட மொத்த உற்பத்திகிரயமும், , சீராக்கப்பட்ட விற்பனைக் கிரயம் முறையே யாது?

அ) சீராக்கப்பட்ட மொத்த உற்பத்திகிரயமும், ரூ ……………………………

ஆ) சீராக்கப்பட்ட விற்பனைக் கிரயம் ரூ …………………………..

40. திருத்தப்பட்ட சரியான மொத்தலாபம் யாது? ரூ …………………………

❖ *முல்லை விளையாட்டுக் கழகத்தின் ஏடுகளில் 31.3.2021 இலும் 31.3.2020 இலு உள்ள மீதிகள் வருமாறு*

| | *31.3.2021* | *31.3.2020* |
|---|---|---|
| *ஆதனம் பொறி உபகரணம்* | *185000* | *160000* |
| *கட்டிட நிதி* | *50000* | *75000* |
| *ஆயுள் அங்கத்தவ நிதி* | *30000* | *40000* |
| *முற்பண சந்தா* | *4000* | *3000* |
| *வருமதி சந்தா* | *2000* | *5000* |
| *காசு* | *75000* | *65000* |

*41ம், 42ம், வினாக்களுக்கு விடை தருக.*

41. பின்வருவனவற்றை கணிக்குக ?

அ) 31.3.2021 இல் திரண்ணட நிதி ரூ …………………………..

ஆ) 31.3.2021 இல் திரண்ட நிதி ரூ …………………………….

இ) 31.3.2021 இல் முடிவடைந்த நிதியாண்டுக்கான மிகை அல்லது பற்றாக்குறை ரூ ………..

42. 31.3.2021 இல் உரிமையாண்மை யாது? ……………………………..

43. பங்குடைமை தொடர்பில் பின்வரும் கூற்றுக்களில் சரியான கூற்றைத் தெரிவு செய்க

A – பங்காளர் சேரல் அல்லது விலகல் வருட ஆரம்பத்தில் அல்லது இறுதியில் மாத்திரம் இடம் பெறமுடியும். (……….)

B – பங்காளருக்கு வழங்கவேண்டிய சம்பளம் பங்குடைமையின் உரிமையாண்மையை குறைக்கும். (………)

C – பங்காளர் சேரல் வருட ஆரம்பத்தில் இடம்பெறின் வருட இறுதி மூலதனமீதிக்கு வட்டி வழங்க வேண்டும். (………)

D – பங்காளர் வழங்கிய கடனுக்கு ஆண்டுக்கு 5% வட்டி வழங்க வேண்டும் என 1890 ம் ஆண்டு பங்குடைமை கட்டளைச்சட்டத்தின் 24 ம் பிரிவு வலியுறுத்துகின்றது. (………)

❖ ஒரு பங்குடைமையில் ஆதி, சிவன், பரமன் என்போர் இலாபநட்டங்களை முறையே 5:3:2 என பகிரும் பங்காளர்கள் 1.4.2020 இல் உள்ளவாறான மூலதன நடைமுறை கணக்கு மீதிகள் வருமாறு:-

| | மூலதனம் ரூ | நடைமுறை கணக்கு ரூ |
|---|---|---|
| ஆதி | 300 000 | 12000 |
| சிவன் | 200 000 | (10000) |
| பரமன் | 150 000 | 8000 |

1.4.2020 இல் சிவன் இளைப்பாற ஆதியும் பரமனும் இலாபநட்டங்களை முறையே 3:2 என பகிர்வு செய்ததுடன் மூலதனத்திற்கு ஆண்டுக்கு 10% வட்டி வழங்குவதுடன் பங்காளர்கள் ஒவ்வொருவருக்கும் ஆண்டுச் சம்பளமாக முறையே ரூ 40 000, ரூ 30 000 வழங்கப்பட வேண்டும். 31.3.2021 இல் முடிவடைந்த ஆண்டுக்கான இலாபம் ரூ 220 000 சிவனுக்கு செலுத்தவேண்டிய தொகை முழுவதும் 12% கடன் கணக்கிற்கு மாற்றப்பட்டது. சிவன் இளைப்பாறும்போது நன்மதிப்பு தொடர்பான சீராக்கங்ளை பங்காளர் மூலதன கணக்கில் மேற்கொள்ளப்பட்டது. இக் கடன் வட்டியில் ½ ஆண்டு வட்டி ரூ 15000 இவ்வாண்டு செலுத்தப்பட்டது.

**44ம் 45ம் வினாக்களுக்கு விடைதருக**

44. அ) சிவனின் நன்மதிப்பு பங்கு யாது? …………………………

ஆ) சிவனுக்கு செலுத்தவேண்டிய தொகை யாது? ……………………..

45. 31.3.2021 இல் பங்காளர் நடைமுறை கணக்கு மீதிகள் யாது?

அ) நடைமுறை கணக்கு ஆதி ரூ ………………… பரமன் ரூ …………………….

ஆ) பங்காளர் மூலதன கணக்கு ஆதி ரூ …………….. பரமன் ரூ …………………….

❖ வரையறுத்த தாரகி கம்பனியின் M என்ற பொருளுடன் தொடர்புடைய தகவல்கள் வருமாறு

அலகுக்கான மூலப்பொருள் 150

அலகுக்கான கூலி 100

அலகுக்கு உறிஞ்சப்பட்ட மேந்தலை P திணைக்களத்தில் ரூ 40

Q திணைக்களத்தில் ரூ 30

அலகுக்கு பயன்படுத்திய மணித்தியாலம் P திணைக்களத்தில் 4 மணி

அலகுக்கு பயன்படுத்திய மணித்தியாலம் Q திணைக்களத்தில் 1மணி 30 நிமிடம்

P திணைக்களத்தில் பாதிடப்பட்ட இயந்திர மணி 10000 மணி

Q திணைக்களத்தில் பாதிடப்பட்ட இயந்திர மணி 5000 மணி

மேற்படி தகவல்களில் இருந்து **46ம், 47 ம்** வினாக்களுக்கு விடை தருக.

46. P திணைக்களத்தின் பாதிடப்பட்ட மேந்தலை யாது? …………………………

47 Q திணைக்களத்தின் உறிஞ்சுதல் விகிதம் யாது? ……………………………

48. வரையறுத்த சேயோன் கம்பனியின் 31.3.2020 இல் முடிவடைந்த நிதியாண்டுக்கான தகவல்கள்

நடைமுறை விகிதம் 2.5:1

இருப்பு புரள்வு விகிதம் 3 தடவைகள்

விற்பனை ரூ 250000

மொத்தலாப வீதம் 40%

ஆரம்ப இருப்பு ரூ 40000

நடைமுறைப்பொறுப்பு ரூ 40000

அ) 31.3.2020 இல் உள்ள இருப்பின் பெறுமதி யாது? ……………………………….

ஆ) விரைவு விகிதம் யாது? ……………………………………..

49. கரன் கம்பனியின் தனிப் பொருள் தொடர்பான தகவல்கள் வருமாறு

பாதுகாப்பு எல்லை 400 அலகுகள்

இலாபம் ரூ 8000

அலகொன்றின் விற்பனை விலை ரூ 200

தற்போதய விற்பனை மட்டம் 1200 அலகுகள்

அ) சமப்பாட்டு புள்ளியை அலகிலும், பெறுமதியிலும் தருக?

……………………………. ……………………………………………….

ஆ) மொத்த நிலையான செலவும் அலகுக்கான மாறும் செலவும் யாது?

மொத்த நிலையான செலவு ரூ ……………………………..

அலகு மாறும் செலவு ரூ …………………………

50. ரூபா 180000 பொறியில் முதலீடு செய்துள்ள கம்பனியின் பயனள்ள ஆயுட்காலம் 5 வருடம் இழிவுப்பெறுமதி ரூ 20000 முதல் ஐந்து வருடங்களில் காசோட்டம் முறையே ரூபா 58000, ரூபா 52000, ரூபா 48000, ரூபா 22000, ரூபா 20000, காசோட்டமாக பெற்றுள்ளது. சராசரி முதலீடு திரும்பல்வீதம் யாது?

……………………………………………………………………………………………………..